(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 128.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011 ஒற்றோபர் 18, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0285/ '10

1\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றையும்,

(ii) மேற்படி அமைச்சின் தற்போதைய மொத்தச் செலவினத்தை மாத மற்றும் வருட வாரியாகவும்,

(iii) நிரந்தர பணியாள் தொகுதியின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த மொத்த ஊதியங்களையும்,

(iv) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அவர்களின் பணியாள் தொகுதியினர் ஆகியோருக்கான மாதாந்த மொத்தச் செலவினத்தையும்

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0756/ '10

2\.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருக்கும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய கற்பித்தல் டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்படி கற்பித்தல் டிப்ளோமாதாரிகளில் கலைமானிப் பட்டம், விஞ்ஞானமானிப் பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் முதுகலைமானிப்பட்டம் ஆகிய பட்டக் கற்கை நிலைகள் வரை உயர்கல்வி பயின்றுள்ளவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) பெற்றுக் கொண்டுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையின் அந்தந்த தரங்களுக்கு கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் நியமிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் பணியாற்றும் கற்பித்தல் டிப்ளோமாதாரி ஆசிரியர்கள் பட்டம் பெற்றிருப்பார்களானால், இவர்களின் நியமனங்களை பட்டதாரி ஆசிரியர் நியமனங்களாக கருதி ஆசிரியர் சேவையில் உரிய தரங்களில் அமர்த்துவதற்கான சுற்றுநிருபமொன்று மேற்படி மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) ஏனைய கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் பெற்றுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0842/ '10

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010, ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்ட சனாதிபதி உள்ளிட்ட குழுவில் உள்ளடங்கிய அங்கத்தவர் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி மாநாட்டுக்காக ஒரு நாட்டுக்குக் கிடைக்கின்ற உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படிகுழு தங்கியிருந்த இடத்தின் பெயர் யாதென்பதையும்,

(iv) மேற்படி பயணத்துக்கு செலவான மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்,

(v) இச் செலவை பொறுப்பேற்பது யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாநாட்டுக்கு, ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1245/ '11

4\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சுற்றாடல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1298/ '11

5\.

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் பல்லெபொல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெமதொய கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி நீர் வழங்கல் கருத்திட்டம் நிறுத்தப்பட்டதால் இப்பிரதேசத்தில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் தீவிர குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(ii) நீர் வழங்கல் கருத்திட்டத்தின் பணிகளை விரைவாக ஆரம்பித்து இப்பிரதேச மக்களின் நீர் தேவையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

(iii) ஆமெனின் , மேற்படி பணிகளை ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0475/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2006 ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட்ட திகதியையும்;

(ii) ஐ.தே.க. மற்றும் ம.வி.மு. ஆகிய கட்சிகள் வெற்றி பெற்ற சபைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) உரிய காலத்திற்கு முன்னரே இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட சபைகளின் எண்ணிக்கையையும்;

(iv) அச் சபைகளின் பெயர்களையும்;

(v) இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட திகதிகள், மற்றும் அதற்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர பிதாக்கள் அகற்றப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட, பதவி நீக்கப்பட்ட அல்லது விசாரணை தொடரப்படும் (ii)இல் குறிப்பிட்ட சபைகளின் பெயர்களையும்;

(ii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதிகளையும் அவற்றுக்கான காரணங்களையும்;

(iii) தற்போது அவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1023/ '10

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையில் பணவீக்கத்தை கணிப்பிடுவதற்காக தற்போது பயன்படுத்தப் படுகின்ற முறைமையியல் திருப்தியடையக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) மேற்படி நடவடிக்கைகள் மூலம் போதியளவில் பணவீக்கம் கட்டுப்படுத்தப் படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1299/ '11

8.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவின் பல்லேபொல மன்னவத்த சந்தியிலிருந்து கொடவெலலந்த வரையான வீதியில் உள்ள பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) இதன் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், நிர்மாணிப்புப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகளை மீள ஆரம்பிக்க துரிதமாக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1314/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தில் பணிபுரிகின்ற நிரந்தர மற்றும் அமய சிவில் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இவ்வூழியர்களுக்கு ஒரு மாதத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவாக வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2011 சனவரி மாதம் தொடக்கம் இதுவரை இந்த ஊழியர்களுக்கு உரிய முறையில் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதாக யாதென்பதையும்;

(iv) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) 2011 சனவரி மாதம் தொடக்கம் இற்றைவரை செலுத்தப்படாதுள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1626/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 மே மாதத்தில் இருந்து இற்றை வரை போக்குவரத்து அமைச்சர் / பிரதி அமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தினதும் நோக்கங்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள் யாவை;

(iv) ஒவ்வொரு விஜயத்திலும் பங்கேற்ற உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிரத்தியேக பதவியணி உத்தியோகத்தர்கள் யாவர்;

(v) இவ்வாறு பங்கேற்றவர்கள் ஒவ்வொரு விஜயத்தின் போதும் பயணஞ்செய்த விமான வகுப்பு மற்றும் அதற்காக செலவிட்ட பணத் தொகை தனித்தனியாக எவ்வளவு;

(vi) மேற்படி விஜயங்களுக்காக செலவாகிய மொத்தப் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0586/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுதந்திரம் அடைந்தது முதல் ஏனைய நாடுகளுக்கு காணிகளை அன்பளிப்பாக இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், எத்தனை பேர்ச்சுகள் அல்லது ஏக்கர்கள் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அக் காணிகளை வழங்கியமைக்கான நோக்கம் என்னவென்பதையும்;

(iv) உள்நாட்டுக் காணிகள் வழங்கப்பட்ட அத்தகைய நாடுகளிடமிருந்து அதனையொத்த காணிகளை இலங்கை பரஸ்பரம் பெற்றுக்கொண்டதா என்பதையும்;

(v) ஆமெனில், பெற்றுக்கொண்ட காணிகளின் பரப்பளவு, திகதி, நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1026/ '10

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளாக கிடைத்த நிதித் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி வருடங்களில் போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்தனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1300/ '11

13.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் எல்பிட்டிய கல்வி வலயத்துக்கு உரித்தான கா/பிட்டிகல மஹா வித்தியாலயம் இற்றைக்கு எட்டு வருடங்களுக்கு முன்னர் சகல வசதிகளையும் கொண்ட மஹா வித்தியாலயமாக பிரபல்யமடைந்திருந்தது என்பதையும்;

(ii) சில வருடங்களுக்கு முன்னர் மேற்படி பாடசாலை மூடப்பட்டதால் அதற்குரித்தான சுமார் பத்து கட்டடங்கள் தற்போது அழிவடைந்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீதி வசதிகளைக் கொண்ட பிரதேசத்தில் காணப்படுகின்ற மேற்படி பெறுமதிமிக்க வளத்தை மீண்டும் பாடசாலையாக மேம்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் யாது என்பதையும்;

(iii) பாடசாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வேறு பயன்மிக்க நடவடிக்கைக்கு மேற்படி கட்டடத்தையும், ஏனைய வளங்களையும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி கட்டடங்களை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பணி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1315/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி முகத்திடலில் அமைந்துள்ள இலங்கை இராணுவத் தலைமையகத்தை அகற்றி அது அமைந்துள்ள காணியை வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) குத்தகை அல்லது நிரந்தர அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கம்பனியின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காணி வழங்குதல் தொடர்பான உடன்படிக்கையை சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 டிசம்பர் மாதம் தொடக்கம் இற்றைவரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்/ பிரதி அமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தினதும் நோக்கம் மற்றும் பெறப்பட்ட பெறுபேறுகள் யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு விஜயத்திலும் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், மற்றும் பிரத்தியேக பணியாட்டொகுதியினர் யாவர் என்பதையும்;

(v) மேற்படி பங்குபற்றியவர்கள் ஒவ்வொரு விஜயத்திற்கும் பயன்படுத்திய விமானத்தின் வகுப்பு மற்றும் இதற்காக செலவிட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி விஜயத்திற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ என். டென்சில் பெர்னான்டோ.

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எச்.ஜீ.பி. நெல்சன்.

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மேர்வின் ஜே குறே.

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீடு (2012),— 2012 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அத்தகைய செயற்பாடு களுக்கான செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும், திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தம்),— 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மினுவாங்கொட சிங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை சமூக மருந்தாளர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

6.

கௌரவ ருவன் ரணதுங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

7.

கௌரவ திலங்க சுமதிபால,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மெத் சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

8.

கௌரவ திலங்க சுமதிபால ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.5),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சித் செவன மன மந்தபுத்தியுள்ள சிறுவர் அபிவிருத்தி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 2.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 (1) (அ) ஆம் பிரிவின் கீழ், இயற்கைத் தன்மை கெடாத குடிபான வகையினைச் சார்ந்த, விற்பனை நோக்கில் போத்தலில் அடைக்கப்பட்டதுமான மதுபான ஏற்றுமதிக்காக, அனுமதி வழங்கல் தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2011 யூன் மாதம் 21 ஆம் திகதிய 1711/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 937)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவின் கீழ், உள்நாட்டு மருந்து உற்பத்தி மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில், நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஈதைல் மதுசாரம் தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2011யூன் மாதம் 21 ஆம் திகதிய 1711/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 938)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை 11 ஆம் திகதிய 1714/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூலை 11 ஆம் திகதிய 1714/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து 12 ஆம் திகதிய 1718/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 ஓகத்து 12 ஆம் திகதிய 1718/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*12.

நொத்தாரிசுகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 16.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 19.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 25.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011),— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

28.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

ஸ்ரீ தம்மாலங்கார சமூக சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

தெஹிவளை நெதிமாலை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரீசலனை.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**